**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**வழக்கு எண் O.S.No.158/2020** **P.W.1**

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.D.கோவர்த்தனகிரி, என்பவரால் வாக்குமூலம் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் சாட்சியின் வாக்குமூலம் 1873ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | சிந்து | தொழில் |
| த.பெ. | | மதம் |
| கிராமம் | | சாதி |
| வயது | | வட்டம் |

**முதல் விசாரணை - 29.03.2023**

நான் இந்த வழக்கில் வாதி. இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 1 முதல் 16 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அவற்றை வாதி தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 16.07.1999 – Xerox copy of Marriage Invitation between Plaintiff and Defendant – Ex.A.1 (Compared with original).

2. 25.05.2001 – Xerox copy of Sale deed Vide Doc.No.2505/2001 - Ex.A.2 (Compared with original).

3. 25.05.2001 – Xerox copy of Bank Statement of Plaintiff's Father - Ex.A.3 (Compared with original).

4. 25.05.2001 – Xerox copy of Bankers Cheque from State Bank of India Vide No.693435 – Ex.A.4.

5. 25.05.2001 – Xerox copy of Bankers Cheque from State Bank of India Vide No.693436 – Ex.A.5.

6. 25.05.2001 – Xerox copy of Bankers Cheque from State Bank of India Vide No.693435 – Ex.A.6.

7. 20.03.2003 – Xerox copy of Birth Certificate of First Child – Ex.A.7 (Compared with original).

8. 19.12.2006 – Xerox copy of Birth Certificate of Second Child - Ex.A.8 (Compared with original).

9. Xerox copy of Aadhar card of Plaintiff - Ex.A.9 (Compared with original).

10. 16.03.2020 – Xerox copy of Encumbrance Certificate from 1987 to 2020 - Ex.A.10 (Compared with original).

11. 07.06.2019 – Xerox copy of Restitution petition filed by Defendant in Irijalakuda Family Court, Kerala - Ex.A.11 (Compared with original).

12. 09.06.2019 – Xerox copy of Joint Agreement entered between Plaintiff and Defendant - Ex.A.12 (Compared with original).

13. 23.11.2019 – Xerox copy of Order from the Family Court, Kerala - Ex.A.13 (Compared with original).

14. 2020 – Xerox copy of Divorce petition filed by Defendant in Family Court, Irijalakuda - Ex.A.14 (Compared with original).

15. 11.03.2020 – Xerox copy of Divorce petition filed by Plaintiff in Sub Court, Tambaram - Ex.A.15 (Compared with original).

16. 03.01.2020 – Print out of Whatsapp message sent by Defendant to Plaintiff's brother - Ex.A.16 (Compared with original).

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(வா.சா.ஆ.4 முதல் வா.சா.ஆ.6 ஆவணங்கள் ஜெராக்ஸ் ஆவணங்கள் என்று பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு, ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் பி.ஏ. இந்தி படித்துள்ளேன். எனக்கும் சசிகுமாருக்கும் எப்பொழுது திருமணம் நடந்தது என்றால் 16.07.1999ல் திருமணம் நடந்தது. நான் எங்கும் வேலை செய்யவில்லை என்றால் 2008 முதல் 2009 வரை பிளைண்ட் பள்ளியில் வேலை செய்து வந்தேன். 1999 முதல் 2008 வரை House wife ஆக இருந்தேன் என்றால் சரிதான். எங்கள் திருமணத்தின் போதே என் கணவர் வெளிநாட்டில் வேலை செய்து வந்தார் என்றால் ஆமாம். வழக்கு சொத்தின் மொத்த விஸ்தீரணம் என்னவென்றால் 2600 சதுர அடி ஆகும். மேற்படி 2600 சதுர அடியில் கட்டிடம் இருந்ததா என்றால் சொத்து வாங்கிய பிறகு தரைதளம் மற்றும் முதல்தளம் இருந்தது. நான் வாங்கும் போது சிறிய கட்டிடம் இருந்தது. தரைதளம் எத்தனை சதுர அடி என்றால் 1400 சதுர அடி ஒரே போஷனாக இருந்தது. முதல் தளம் எத்தனை சதுர அடி என்றால் 1400 சதுர அடி இரண்டு போஷனாக இருந்தது. மேற்படி கட்டிடத்திற்கு மின் இணைப்பு என் பெயரிலும் என் கணவர் பெயரிலும் உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் சொத்து விவரத்தில் சொத்தின் விஸ்தீரணம் 2600 சதுர அடி என்று குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிடவில்லை. சொத்து விவரத்தில் தரைதளம் மற்றும் முதல் தளம் உள்ள விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சொத்து விவரத்தில் சொல்லவில்லை. மின் இணைப்பு மற்றும் சர்வீஸ் கனெக்ஷன் குறித்தும் சொத்து விவரத்தில் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. என் முதல் மகனுக்கு என்ன வயது என்றால் 20 வயதாகிறது. என் முதல் மகனின் பிறந்த தேதி என்னவென்றால் 20.03.2002. என் மகளுக்கு என்ன வயது என்றால் 17 வயதாகிறது. மேற்படி நாங்கள் மூவரும் எந்த விலாசத்தில் குடியிருக்கிறோம் என்றால் நம்பர் 66, SBI காலனி, குரோம்பேட்டையில் குடியிருக்கிறோம். வழக்கு சொத்தில் தற்போது வாடகைதாரர்கள் இருக்கிறார்களா என்றால் இருக்கிறார்கள். எவ்வளவு வாடகை வருகிறது என்றால் தரைதளத்திற்கு எவ்வளவு வாடகை என்றால் ரூ.13,000/-மும், முதல் தளத்தில் ஒரு போஷனில் ரூ.6,000/-மும் வாடகை வருகிறது. மற்றொரு போஷனில் பிரதிவாதி குடியிருக்கிறார்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

**O.S.No.158/2020 P.W.1-சிந்து 10.08.2023**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

சொத்தை எவ்வளவு ரூபாய்க்கு கிரயம் வாங்கினோம் என்றால் ரூ.4,25,000/- கொடுத்துள்ளோம். ஆனால் சந்தை மதிப்பு ரூ.3,94,720/-ன் படி கிரயம் செய்யப்பட்டது. நான் ரூ.1,00.000/-யை முன்பணமாக கொடுத்தோம், மீதி தொகை ரூ.3,25,000/-யை காசோலை மூலமாக கொடுத்துள்ளோம். நான் யாரிடமிருந்து சொத்தை கிரயம் வாங்கினேன் என்றால் ஜாபர் என்பவரிடமிருந்து கிரயம் வாங்கினோம். வா.சா.ஆ.2 கிரய பத்திரத்தில் கொடுக்கப்பட்டுள்ள தொகை காசோலை மூலமாக கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் அதில் குறிப்பிட்டு சொல்லவில்லை, ஆனால் நாங்கள் காசோலை மூலமாக கொடுத்தோம். கிரய பத்திரத்திற்கு எவ்வளவு ரூபாய்க்கு ஸ்டாம்பு பேப்பர் வாங்கினோம் என்றால் ரூ.50,000/-க்கு வாங்கினோம். கிரய பத்திரம் பதிவு செய்த அன்று ஸ்டாம்பு பேப்பர் வாங்கினோமா அல்லது அதற்கு முன்பு வாங்கினோமா என்றால் கிரய பத்திரம் பதிவு செய்வதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு வாங்கினோம், தேதி சரியாக ஞாபகமில்லை. கிரய பத்திரத்திற்கான ஸ்டாம்பு பேப்பரை யார் வாங்கினார்கள் என்றால் சசிகுமார் வாங்கினார். ஸ்டாம்பு பேப்பரானது என் பெயரிலும், சசிகுமார் பெயரிலும் கூட்டாக வாங்கவில்லை என்றால் சசிகுமார் கூட்டாக வாங்கவில்லை. ஸ்டாம்பு பேப்பருக்கான தொகையை என் அப்பா சசிகுமாரிடம் கொடுத்தார். ஸ்டாம்பு பேப்பருக்கான பணத்தை என் அப்பா சசிகுமாரிடம் கொடுக்கவில்லை என்றும், ஸ்டாம்பு பேப்பருக்கான தொகையை சசிகுமார்தான் கொடுத்ததால் அவர் பெயரில் பத்திரம் வாங்கப்பட்டது என்றும், பின்னிட்டு நாங்கள் தகராறு செய்ததால் கிரய பத்திரத்தில் என்னுடைய பெயர் சேர்க்கப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. கிரய பத்திரத்தில் யார், யார் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்றால் முருகானந்தம் எங்கள் புரோக்கர் மற்றும் வடிவேலு என்ற புரோக்கரும் சாட்சி கையெழுத்து போட்டார்கள். வா.சா.ஆ.2 கிரய பத்திரத்தில் மேற்கூறிய சாட்சிகள் கையொப்பம் போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். எனது புரோக்கர் முருகானந்தம் தற்போது உயிருடன் இருக்கிறாரா என்றால் தெரியவில்லை. நான் ஜாபருக்கு காசோலை கொடுக்கும்போது என்னுடைய புரோக்கர் முருகானந்தம் பார்த்தாரா என்றால் பார்த்தார்.

வா.சா.ஆ.3 என அப்பாவின் வங்கி கணக்கு ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.3ல் 25.05.2001ல் காசோலை மூலமாக ரூ.3,25,000/- கொடுத்ததாக உள்ளது என்றால் உள்ளது. என் அப்பா எந்த வங்கியின் காசோலையை கொடுத்தார் என்றால் வா.சா.ஆ.3 Statement Bank of India காசோலை கொடுத்தார். வா.சா.ஆ.3 ஆவணத்தில் Bankers Cheque தந்ததாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் அதில் சொல்லப்பட்டுள்ளது. என் அப்பா Bankers Cheque மூலமாக ஜாபருக்கு தொகை கொடுக்கவில்லை என்று சொன்னால் தவறாகும், என் அப்பா பணம் கொடுத்ததற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். நிலம் விற்பவருக்கு Bankers Cheque மூலமாக பணம் செலுத்தியிருந்தால் அது குறித்த விவரம் கிரய பத்திரத்தில் சொல்லப்பட்டிருக்கும் என்றும், அவ்வாறு Bankers Cheque கொடுக்காததால் தான் அது குறித்த விவரம் கிரய பத்திரத்தில் சொல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் அனைத்து ஆதாரங்களையும் தாக்கல் செய்துள்ளேன். என் அப்பா State Bank-ல் வேலை பார்த்ததால் அவருடைய செல்வாக்கை பயன்படுத்தி வா.சா.ஆ.4 முதல் வா.சா.ஆ.6 ஆவணங்கள் இந்த வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல, அதற்கு எதுவும் அவசியமில்லை. நான் சொத்தை கிரயம் வாங்கும்போது இருந்த ஓட்டுவீட்டை இடித்து விட்டு வீடு கட்டுவதற்கு தரைதளம் மற்றும் முதல் தளம் கட்டுவதற்கு ரூ.16,00,000/- செலவானது. வா.சா.ஆ.2 கிரய பத்திரத்தில் வழக்கு சொத்தில் ஓடு வீடு இருந்ததாக குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லவில்லை.

(வா.சா.1 சாட்சி குறுக்கு விசாரணையின் போது கேட்கப்பட்ட கேள்விக்கான பதிலை சொல்லாமல் அதிகப்படியான பதிலை சொல்லி பேசியதால் நீதிமன்றத்தால் சாட்சியின் விசாரணை பதிவு செய்ய இயலாமல் போனதால் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

வீடு கட்டுவதற்கு ரூ.16,00,000/- செலவானது என்பதை காண்பிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எவ்வளவு லோன் வாங்கினேன் என்றால் என் அண்ணனின் நண்பர் மூலமாகவும், என் அப்பாவின் நண்பர் மூலமாகவும் கடன் வாங்கியுள்ளோம். நான் யார், யாரிடமிருந்து லோன் வாங்கினேன் என்று பெயர் எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது வழக்குரையில் வீடு கட்டுவதற்காக நகைகளை அடமானம் வைத்து கட்டியதாக சொல்லியுள்ளதில், எவ்வளவு நகை மற்றும் எவ்வளவு தொகைக்கு அடமானம் வைக்கப்பட்டது என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. என் வீட்டில் எத்தனை பேர் வாடகைக்கு உள்ளார்கள் என்றால் மொத்தம் 3 நபர்கள் வாடகைக்கு இருக்கிறார்கள், அவர்களின் பெயர்கள் தயாளன், பிரேமா, மணி, கவி ஆகியோர்கள் தரை தளத்தில் குடியிருக்கிறார்கள். முதல் தளத்தில் அருண் குடியிருக்கிறார். அருண் எவ்வளவு வாடகை கொடுக்கிறார் என்றால் ரூ.6,000/- வாடகை கொடுக்கிறார். தயாளன் என்பவர் தரை தளத்தில் மொத்த போசனிலும் குடியிருக்கிறார். என் பெயரிலும், பிரதிவாதி பெயரிலும் குரோம்பேட்டை IOB வங்கியில் கூட்டு வங்கி கணக்கு உள்ளது என்றால் சரிதான், எந்த வருடம் வங்கி கணக்கு துவங்கப்பட்டது என்றால் 2006ல் துவங்கப்பட்டது. காசோலையில் இருவரும் சேர்ந்து கையெழுத்திட வேண்டுமென்றால் சரியல்ல. பிரதிவாதி வெளிநாட்டில் வேலை செய்வதால் காசோலையில் நான் மட்டும் கையெழுத்து போட்டு பணம் எடுப்பேன் என்றால் நான் காசோலை மூலம் பணம் எடுத்ததில்லை. நான் காசோலையில் கையெழுத்து போட்டு யாருக்கு கொடுக்கவில்லையா என்றால் சசிகுமார்தான் கையெழுத்து போட்டு கொடுத்துள்ளார். சசிகுமார் 2016ல் வந்திருந்தார். தற்போது சாட்சியிடம் காண்பிக்கப்படும் வங்கி கணக்கு ஆவணத்தில் 10.3.2016ல் ரூ.20,000/- பீதாம்பரம் என்பவர் மூலம் வங்கி கணக்கிலிருந்து withdrawal செய்யப்பட்டது என்றால் சரிதான். 14.7.2016 அன்று ரூ.10,000/- பீதாம்பரம் என்பவர் மூலம் வங்கி கணக்கிலிருந்து withdrawal செய்யப்பட்டது என்றால் சரிதான். 23.2.2018 அன்று காசோலை மூலமாக ரூ.5,000/- என் அப்பா பீதாம்பரம் என்பவர் மூலம் வங்கி கணக்கிலிருந்து withdrawal

செய்யப்பட்டது என்றால் சரிதான். வீட்டு செலவிற்காக எடுக்கப்பட்டது. 16.3.2018 அன்று காசோலை மூலமாக ரூ.5,000/- என் அப்பா பீதாம்பரம் என்பவர் மூலம் வங்கி கணக்கிலிருந்து withdrawal செய்யப்பட்டது என்றால் சரிதான், வீட்டு செலவிற்காக எடுக்கப்பட்டது. 15.4.2019 அன்று காசோலை மூலமாக ரூ.4,000/- என் அப்பா பீதாம்பரம் என்பவர் மூலம் வங்கி கணக்கிலிருந்து withdrawal செய்யப்பட்டது என்றால் சரிதான், வீட்டு செலவிற்காக எடுக்கப்பட்டது. 10.5.2019 அன்று காசோலை மூலமாக ரூ.45,000/- என் அப்பா பீதாம்பரம் என்பவர் மூலம் வங்கி கணக்கிலிருந்து withdrawal செய்யப்பட்டது என்றால் சரிதான். என் அப்பாவிடம் பிரதிவாதி நிறைய கடன் வாங்கியுள்ளதை திருப்பி கொடுப்பதற்காக செலுத்தப்பட்டது. 20.8.2019 அன்று காசோலை மூலமாக ரூ.4,000/- என் அப்பா பீதாம்பரம் என்பவர் மூலம் வங்கி கணக்கிலிருந்து withdrawal செய்யப்பட்டது என்றால் சரிதான். 4.10.2019 அன்று காசோலை மூலமாக ரூ.25,000/- என் அப்பா பீதாம்பரம் என்பவர் மூலம் வங்கி கணக்கிலிருந்து withdrawal செய்யப்பட்டது என்றால் சரிதான், பிரதிவாதி கொஞ்சம், கொஞ்சமாக பணத்தை திருப்பி செலுத்தினார். 29.10.2019 அன்று காசோலை மூலமாக ரூ.9,000/- என் அப்பா பீதாம்பரம் என்பவர் மூலம் வங்கி கணக்கிலிருந்து withdrawal செய்யப்பட்டது என்றால் சரிதான். சாட்சியிடம் காண்பிக்கப்பட்ட வங்கி கணக்கு பட்டியல் ஆவணம் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரதிவாதி வெளிநாட்டில் வாங்கும் சம்பளத்தை Joint Account மூலமாகத்தான் transfer செய்வார் என்றால் மொத்த சம்பளத்தையும் transfer செய்ய மாட்டார், சிறு, சிறு தொகைகளை தான் transfer செய்வார். பிரதிவாதியின் சம்பளத்தை வைத்துதான் வீடு கட்டப்பட்டது என்றும், என் அப்பா பணத்தை வீடு கட்டியதாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதிக்கு மட்டும் பாத்தியம் என்றும், கிரய பத்திரத்தில் கண்டுள்ள என் பெயரை நீக்கம் செய்யும்படி எதிரிடை பாத்தியம் கோரி தாக்கல் செய்துள்ள மனு குறித்து தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எனவே நிலம் வாங்கியதும், வீடு கட்டியதும் பிரதிவாதியின் பணத்தில்தான் என்றும், எனவே என்னுடைய பெயர் கிரய பத்திரத்திலிருந்து நீக்கப்பட வேண்டுமென்று சொன்னால் சரியல்ல, நான் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். Joint Account க்கான அசல்

வங்கி கணக்கு புத்தகம் என்னிடம்தான் உள்ளதா என்றால் என்னிடம்தான் உள்ளது. பிரதிவாதி வீட்டு செலவிற்காக சிறு, சிறு தொகையாக அனுப்பியதற்கு அசல் வங்கி கணக்கு ஆவணத்தை தாக்கல் செய்தால் தெரியவரும் என்றால் சரிதான். வழக்கு சொத்தானது பிரதிவாதியின் கடும் உழைப்பில் வாங்கப்பட்ட சொத்து என்றும், பிரதிவாதிக்கு தொல்லை கொடுக்க வேண்டுமென்று இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கை நான் ஒரு கெட்ட எண்ணத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றும், இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு எனக்கு தகுதி இல்லை என்றும், எனவே வழக்கு சொத்தின் முழு உரிமையாளர் என்று விளம்புகை செய்வதற்கு எனக்கு தகுதி இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனவே என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும், பிரதிவாதிக்கு ஆதரவாக எதிரிடை பாத்தியம் உத்தரவாக வேண்டுமென்றும் சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை